

# பிள்ளையார் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

அகத்திய முனிவர் அருளிச் செய்த

# பிள்ளையார் கதை.

ஔவையார் அருளிச்செய்த

## விநாயகரகவல்.

பிள்ளையார் கதைக்கு
யாழ்ப்பாணம், இணுவில்,
தணிகைப்புராண உரையாசிரியர்
மஹா வித்துவான்
பொ. அம்பிகைபாக உபாத்தியாயர்
குமாரரும்,
இயற்றமிழாசிரியருமாகிய
ஸ்ரீமாந் வைத்தியலிங்கபிள்ளை
செய்த

## அரும்பதவுரை

ஓய்வு பெற்ற அதிபர், மூதறிஞர்
ஸ்ரீமாந். வை. க. நாதன் அவர்களால்
பதிப்பிக்கப்பட்டன.

(நான்காம் பதிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குரு பாதம்

# ஆசியுரை

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்
இரண்டாவது குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்

சைவ செம்மனச் செல்வர்களே!

பிரணவ சொரூபியான விநாயகப் பெருமானுக்கு நாமாற்றும் கைங்கரியங்கள் எல்லாம் முதல் ஸ்தானம் வகிப்பன. விழாக்களிலோ, பூஜைகளிலோ, சடங்குகளிலோ அவருக்கே முதலிடம். குற்றம் பொறுக்காத மற்றைய மூர்த்திகளும் உண்டு. எமது பிழைகளை எல்லாம் பொறுத்துக் கருணை கூர்ந்து திருவருள் பாலிக்கும் தெய்வம் அவர் ஒருவரே. எனவே, அப்பெருமானின் கதையையும், அகவலையும் சைவமக்கள் இலகுவில் அறிந்துய்யும் வண்ணம் உயர் திரு. V. K. நாதன் அவர்கள் பதிப்பித்து வெளியிடுவது பாராட்டுக்குரியது. சைவமக்கள் இல்லங்களிலெல்லாம் இருக்கவேண்டிய நூல் இது. முக்கியமாகச் சைவப் பிள்ளைகள் கருத்தறிந்து பாராயணம் செய்யவேண்டியது.

வாழ்க சைவம்! வளர்க நற்றமிழ்!!

ஸ்ரீலஸ்ரீ குரு மஹா சந்நிதானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எஸ். சிவலிங்கராஜா M. A.
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை.
யாழ் / பல்கலைக்கழகம்.

ஈழத்துக்கல்வி, இலக்கிய மரபிலே தமக்கென ஓர் இடத்தை வரித்துக்கொண்டவர் இணுவை அம்பிகைபாகர். ஈழத்து உரையாசிரியப் பாரம்பரியத்திலே அவருக்கு நிலையானதோர் இடமுண்டு. கல்விப்பணியே கடவுட்பணியாகக் கொண்டு வாழ்ந்த இணுவை அம்பிகைபாகர் நாவலர் மரபின் தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும் விளங்கியவர். சி. வை. தாவின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாகி அவருடனிருந்து பதிப்புப்பணிக்கு உதவிபுரிந்தவர். உ. வே. சா. வின் என்சரித்திரத்திலே இடம்பெற்றவர்.

அம்பிகைபாகர் தணிகைப்புராணத்திற்குச் சிறந்த வோர் உரை எழுதியவர். அம்பிகைபாகரின் குடும்பத்திற்குத் தமிழ்ப்புலமை பரம்பரைச் சொத்து. அம்பிகைபாகரின் குமாரர் ஸ்ரீமத் வைத்தியலிங்கபிள்ளை அகத்தியமுனிவர் அருளிச்செய்த பிள்ளையார் கதைக்கு ஓர் அரும்பதவுரை எழுதியுள்ளார். உரையாசிரியரின் குமாரர் வை. க. நாதன் இதன் மூன்றாம் பதிப்பை 1950 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இப்போது அவ்வுரை நான்காம் பதிப்பாக வெளிவருகின்றது.

பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம் முதலிய நூல்கள் இன்று கிடைப்பது மிகவும் அருமை.

தமிழர்தம் கலை இலக்கியங்கள் பெரும்பாலும் கோயிற் பண்பாட்டோடொட்டியே வளர்ந்து வந்துள்ளன. தமிழர் சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலிய நுண்கலைகள் எல்லாம் ஆலயச்சூழலிலேயே வாழ்வுபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து உரையாசிரியப் பாரம்பரியத்தை நுணுகி ஆராயும் பொழுது, பெரும்பாலான உரைகள் கோயில் சமயத் தேவைகளினடியாகவே எழுந்துள்ளமையை அவதானிக்கமுடிகின்றது. இந்தவகையிலே கந்தபுராணம், திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம், ஏகாதசிப் புராணம், பிள்ளையார் புராணம், முதலியவற்றை உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம்.

ஸ்ரீமத் வைத்தியலிங்க பிள்ளையவர்களும் பிள்ளையார் விரதம் நோற்கும் 'விரதகாரர்களும்' நன்கு இலகுவாகப் படித்து விளங்கக்கூடியதாகப் பிள்ளையார் கதைக்கு ஓர் அரும்பதவுரை எழுதி வெளியிட்டுள்ளார்கள். பிள்ளையார் நோன்பு நோற்பவர்கள் நோன்பு நாட்களிற் பிள்ளையார் கதையைப் பாராயணம் செய்வது வழக்கம். பாராயணம் செய்வோரும், பிறரும் 'பயன்' பெற அரும்பதவுரை உதவும்.

பிள்ளையார் கதைக்கு ஸ்ரீமத் வைத்தியலிங்கபிள்ளை எழுதிய அரும்பதவுரையோடு ஒளவையார் எழுதிய விநாயகர் அகவலையும் சேர்த்து 1950ஆம் ஆண்டு உரை ஆசிரியரின் குமாரர் வை. க. நாதன் அவர்கள் மூன்றாம் பதிப்பாக வெளியிட்டார்கள்.

சைவ நன்மக்களாயினர் நன்கு பயன்பெறும் பொருட்டு இப்போது நான்காம் பதிப்பு வெளிவருகின்றது. "தொன்மை மறவேல்" என்ற நீதிமொழியைச் சிரமேற் கொள்ளும் இக்குடும்பத்தினர் பிள்ளையார் கதையை அரும்பதவுரையுடன் அச்சிடுவதை மனமுவந்து பாராட்டுகிறோம்.

தமிழ்த்துறை. எஸ். சிவலிங்கராஜா.
12 - 01 - 1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

...ண்டிதமணி, க. சு. நவநீதகிருஷ்ண பாரதி
அவர்கள் அளித்த

# சிறப்புப்பாயிரம்

மகத்தியல் தெளிந்த அகத்தியன் இயற்றிய
வள்ளியார் இளவலை மருவப் புரிந்த
பிள்ளையார் கதையொடு தெள்ளுசுவை யாழினும்
குழலினு மினிய மழலையங் குழவியும்
முழுதுணர் புலமை பழகுதமிழ் வாணரும்
ஒருங்குவந் தோம்பும் அருங்கவிச் செல்வி
எவ்வ மகற்றி இன்பவாழ் வுய்க்கும்
அவ்வை பாடி அருள்வரை மேவிய
செவ்விய விநாயகர் திவ்விய அகவலை.
வருதிரு முறையொடு திருநெறிக் காட்சியும்
மருவிய மாட்சியும் மன்னுபே ராசான்
நுணுகொண் பொருள்வள நுவற்சிசெறி தணிகைப்
புராணந் தனக்கோர் புவியெலாம் போற்ற
ஆய்ந்துரை கண்ட தோய்ந்ததமிழ் வள்ளலாம்
அம்பிகை பாகனார்க் கம்புவிக் கின்புசெய்
மூத்த மகனாம் கீர்த்தி யொடுதித்த
பன்னும் புலமைப் பொன்னம் பலவேள்
முன்னம் பதித்து நன்னயஞ் செய்தனன்,
மற்றவன் இளவலா உற்றநற் புலமை
மயக்கற நிரம்பிய இயற்றமிழ் ஆசான்
சுவைக்கவிக் குளந்தரும் வைத்திய லிங்கமன்
குலமுறைப் படியே நலமுற ஆய்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்ததோ ருரையைத் தோய்ந்தனன் கண்டே.
இரண்டாம் பதிப்பா இம்பர்க் கிந்தனன்,
முரண்பா டிலாத அரண்சேர் பண்பினன்
தவமுறை யொழுகும் சிவநெறிக் கன்பினன்
விழுத்தகை மேவிய பழுத்த புலமையன்
இங்கித வைத்திய லிங்கஅவ் வள்ளல்தன்
நடை மணியாகிய கொடைமணி யாவோன்
சேமஞ்சால் கதிர் காம நாதன்
பகரு மவற்றின் மூன்றும் பதிப்பும்
பதித்துலவாப் புகழ் படைத் தனன்
மதித்துல குவந்து மாண்புபெறற் பொருட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முகவுரை

பொற்புறு மிணுவைக் கற்பகக் களிற்றின்
நற்பத நளிமலர் நாளும்
அன்பொடு வணங்குவ னரும்பொருள் குறித்தே

தாமரைத் தலையிற் காமுற விருந்த
மாமறைத் தலைவி யென்மனத் தகத்தாளே

அம்பிகை பாகனடி மலர் பரவுதூஉம்
செம்பொருண் ஞானஞ் சேருதற் பொருட்டே.

பிள்ளையார் கதை, விநாயகரகவல் என்னும் இவ் விரண்டும் மனந்தூயராய், இறைவனருள் கைகூடப் பெற்ற மகத்துவமிகுந்த அகத்திய முனிவராலும், ஒளவையாராலும் அருளிச் செய்யப் பெற்றுப் பண்டைக் காலந் தொடங்கிச் சைவ நன்மக்களாற் போற்றிப் பாராயணஞ்செய்யப் பெற்று வருகின்றன.

இவற்றுள் பிள்ளையார் கதை விநாயகக் கடவுளின் திருவருட் பிரசாதத்தைத் தெள்ளிதின் விளக்குவதோடு சொன்னயம், பொருணயங்களாற் பொலிந்து இன்னோசை முதலியவற்றான் மலிந்து பாராயணம் பண்ணுவோருக்குப் பக்தி வைராக்கியத்தை ஊட்டுவதிற் சிறந்தது.

விநாயகரகவல் தத்துவ ஞானங்களை மிக எடுத்துப் போதிப்பதாய், சரியையாதி நாற்பாதங்களையுஞ் சுருங்கச் சொல்லுவதாய், வேதாந்த சித்தாந்த சமரசத்தை நன்கு தெரிவிப்பது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் சேரமான் பெருமான் நாயனார் கைலைக்குச் செல்லும் போது ஒளவையாரை நினைக்க அதனை ஞானநோக்கால் உணர்ந்த ஒளவையார், என்றும் விநாயகபூசை செய்பவர் அன்றும் அதனை விரைந்து செய்தாராக, அதனைத் திருவுளத்துணர்ந்த விநாயகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள், "ஔவையே, நின் பூசையை முறைப்படி செய் உன்னை யாம் அவர்களுக்கு முன் கைலைக்குச் செல்லுவான் விடுகின்றா" மென்று திருவாய் மலர்ந்தருள, கேட்ட ஔவையார் 'சீதக்களப' வென்னும் இத்திருவகவலைப் பாடி விநாயகப்பிரானைப் பூசிக்க அப்பெருமான் தமது திருக்கரத் தாற்றூக்கிக் கைலை மலையில் விடுத்தருளினார் என்பர்.

இங்ஙனமாக, இத்திருவகவலிரண்டுந் தோலா நாவின் மேலோர்களாகிய இவ்விரு தெய்வப் புலமையாளர்களாலும் அருளிச் செய்யப் பெற்றுப் பாராயணம் செய்யப்பட்டு வந்தனவேயெனின் இவற்றின் பெருமை எத்தன்மைத் தென்பதை அறிஞர்கள் நன்குணர்வார்கள்.

இவ்வாறாய பெருமை வாய்ந்த இத்திருவகவலி ரண்டினையும் கிடைத்த ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு வழுக் களைந்து சென்ற விரோதி வருடத்தில் எமது மூத்த சகோதரர் ஸ்ரீமத் அ. பொன்னம்பலபிள்ளை அவர்கள் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

இப் பிள்ளையார் கதைக்கு ஒரு அரும்பதவுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தின் இதனைப் பாராயணம் பண்ணு வோர்க்கும் பிறர்க்கும் பெரிதும் பயன்படுமெனப் பலரும் அபிப்பிராயப்பட்டமையின் இதற்கு ஒரு அரும்பதவுரை எழுதி அச்சிட்டு வெளியிடத் துணிந்தேன்.

இவ் வரும்பதவுரை கல்வியறிவானான்றமைந்த பெரி யோர்கள் திருநோக்கில் அகப்பட்டுத் திருத்தமுறு வரையும் பூரண முடையதல்ல என்பதே எனது அபிப்பிராயம்.

இதனை அச்சிடுதற்கு வருஞ் செலவில் ஒரு பாகத் தைத்தாம் தருவதாக வாக்களித்துத் தந்துதவிய மாதகல் ஸ்ரீமத், கா. சதாசிவக்குருக்கள் அவர்களுடைய நன்றி என்றும் மறக்கப்படுவ தொன்றன்று.

இணுவில்
இராட்சத ௵ கார்த்திகை ௴

இங்ஙனம்
அ. க. வை.

உ

இயற்றமிழ் ஆசிரியர் ஸ்ரீமத். அ. க. வைத்தியலிங்கபிள்ளை
அவர்கள்

# வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்.

தேனினுமினிய செந்தமிழ்ச் சிவநெறிக்கு ஆக்கமும் பெருமையும் தந்தவர்களில் பெருமதிப்புக்கு உரியவர் இணுவையூர், இயற்றமிழாசிரியர் ஸ்ரீமத் அ. க. வைத்தியலிங்க பிள்ளை அவர்கள். ஈழவள நன்னாட்டின் நடுநகராக விளங்கும் இணையிலி என்ற காரண நாமங்கொண்ட இணுவை மாநகரில், தென்றமிழ் நாட்டிலிருந்து வந்து ஆதியில் குடியேறியவரும் திருக்கோவலூரிலிருந்து வந்த ஆதிக்க வேளான் குலதிலகருமாகிய பேராயிரவர் வழிவந்த பெருமரபைச் சார்ந்தவரும் இணுவை சைவப்பிரகாச வித்தியாசாலையின் தாபகரும் தருமபரிபாலகரும் தணிகைப்புராண உரையாசிரியரும் ஆகிய மகாவித்துவான் பொ அம்பிகைபாக உபாத்தியாயரின் புத்திரனுமாக உதித்தவர் இயற்றமிழாசிரியர் திரு அ. க. வைத்தியலிங்கபிள்ளையவர்கள்.

நீதிபதி ஸ்ரீமாந் கு. கதிரவேற்பிள்ளை அவர்கள் பாடிய கலித்துறை

"பேராயிர முடையான் சாரிணுவை பிறங்க வரும்
சீரான் மிகுத்தவன் அம்பிகைபாகன் செழுந் தமிழ்நூல்
ஆராய்ந் தறிந்தவன் பாலனைப் பண்டிதன் ஆக்கி
வைத்தோன்
நேரார் தணிகைப் புராணக்கு நல்லுரை நேர்ந்தனனே"

என்னும் சிறப்புப்பாயிரம் இவ்வரலாற்றை வலியுறுத்தும். பாலன் எனக்குறிக்கப்பட்டவர் ஸ்ரீமாந் அ. க. இளைய தம்பி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவை பொன்னம்பலம் - கதிர்காமர் என்னும் இயற்பெயர் கொண்ட மகாவித்துவான் அம்பிகைபாகர் அவர்களுக்கும் பார்பதிப்பிள்ளை அம்மையாருக்கும் புதல்வனாகத் தோன்றிய திகதி 11 - 09 - 1876. இவருக்கு சகோதரர்களாக வந்த திரு அ. க. பொன்னம்பலம், திரு அ. க. இளையதம்பி, பாரதி அ. க. சபாபதிப்பிள்ளை ஆகிய மூவரும் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை கொண்டவர்கள். திரு பொன்னம்பலம் தமிழ் நாட்டில் நாகபட்டணம் புகையிரத நிலையத்தில் சிலகாலம் கடமையாற்றினார். சென்னை சர்வகலாசாலையில் உயர்கல்வி பயின்றவர். திரு அ. க. இளையதம்பி அவர்கள் யாழ் / இந்துக் கல்லூரியில் ஆசிரியராக நீண்ட காலம் சேவை புரிந்தார். திரு அ. க. வைத்தியலிங்கபிள்ளை அவர்களுக்கு இயற்றமிழ் ஆசிரியர் பட்டமும் திரு அ. க. சபாபதிப்பிள்ளை அவர்களுக்குப் பாரதிப் பட்டமும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச மகாவித்தியாலய முன்னாள் அதிபரும் முகாமையாளருமாக இருந்த ஸ்ரீமத் த கயிலாசபிள்ளை தலைமையிலான யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் வழங்கி பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் பிரதம பரீட்சகரும், தலைமைப் பேராசானுமாக இருந்தவர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மரபில், இணுவிலில் சைவமும் தமிழும் வளர்த்த பெரியார்களான திரு அம்பிகைபாக உபாத்தியாயர் அவர்களும் சிவஸ்ரீ நடராசக் குருக்களும் குறிப்பிடத்தக்கவர்கள். முன்னவர் தணிகைப் புராண உரையாசிரியர். பின்னவர் சிவஞான சித்தியார் உரையாசிரியர். இவ்விரு பேராசான்களிடமும் முறைமையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் நிகண்டு முதலாய தொன்னூல்களையும், நன்னூல், தொல்காப்பியம் முதலிய இந் நூல்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழியையும் கற்றுத் தேறிய பெருமைக்குரியவர் திரு அ. க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள். இவர், உரிய மணப்பருவம் அடைந்ததும் இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில் தரும பரிபாலகருள் ஒருவராகிய மயிலர் ஆறுமுகத்தின் சிரேஷ்ட புத்திரி செல்லம்மாவை திருமணம் செய்து இல்லறமே நல்லறமாக வாழ்ந்தவர். சுருங்கச் சொல்லின், சடையனாருக்கு ஒரு இசைஞானியார் வாய்த்தது போல திரு அ. க வைத்தியலிங்கபிள்ளை அவர் களது சமய அனுஷ்டானங்கள் கல்வி மேம்பாடுகளுக்கு ஆதாரமாக அமைந்தவர் திருமதி செல்லம்மா வைத்திய லிங்கபிள்ளை அவர்கள். அவரது சிறந்த பண்பாடு விருந் தோம்பல் ஆகும். எனக்கும் என் சகோதரர்களான பண்டி தர். இ. இராசலிங்கம், அஞ்சல் அதிபர் திரு இ. இராச ரத்தினம்; வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் ஆகிய மூவருக்கும் வித்தியா குருவாக, எழுத் தறிவித்த இறைவனாக விளங்கியவர் திரு அ. க. வைத்திய லிங்கபிள்ளை அவர்கள் எங்களுக்கு மட்டுமல்ல இணுவை மாநகரில் தலைசிறந்த அறிஞர்களுக்கெல்லாம் உறுதுணை யாக இருந்து 12 - 10 - 1942ல் சிவபதம் எய்தும் வரை சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றிவந்தவர். அது மட்டுமல்ல, தந்தையார் நின்ற மெய்ந் நெறியில் தானும் நின்று சிவபூசை எழுந்தருளச் செய்து மரணபரி யந்தம் மெய்ஞானாசாரியராக வாழ்ந்து அந்த நெறியிலே தன் முதல் மைந்தனாக மூதறிஞர் திரு வை. கதிர்காம நாதன் அவர்களையும், மற்றும் அதிபர் திரு வை. சுப்பிர மணியசிவம் அவர்களையும் கல்வி அமைச்சில் நிர்வாக அதிகாரியாகக் கடமை ஆற்றியவரும் 'உதயம்' என்னும் இலக்கிய சஞ்சிகையின் கௌரவ ஆசிரியரும் எழுத்தாளரு மான இளைய மைந்தன் திரு வை. அநவரதவிநாயகமூர்த்தி அவர்களையும்லோகோபகாரிகளாகவாழ்வித்தபெருமைக்கும் பாத்திரராக அமைந்தவர் இயற்றமிழாசிரியர் திரு அ. க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள். அவரது சிபார்சின் பேரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணர் பண்டிதர் இ. இராசலிங்கம் அவர்கள் இணுவைச் சைவப்பிரகாச மகா வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமத். அ. க. வைத்தியலிங்கபிள்ளையவர்கள் தென்றமிழ் நாட்டில் அவர் வாழ்ந்த காலத்துப் புகழொடு விளங்கிய மஹாமஹோபாத்தியாயர் தாக்ஷிணாத்திய கலாநிதி. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடன் உழுவலன்பு பூண்டிருந்தார். தந்தையாரான மகா வித்துவான் அம்பிகைபாகர் அவர்கள், ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களோடு சேர்ந்து ஏட்டுச் சுவடியிலிருந்த நூல்களை அச்சுவாகனம் ஏற்ற உதவிய தன்மை போலத் தொன்மை வாய்ந்த பழைய சுவடிகளிலிருந்த நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதில் டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கு உபகாரியாக இருந்தார். அக்காலத்து, சுவாமி வேதாசலம், சோமசுந்தரபாரதியார், ரா. ராகவையங்கார், சுன்னாகம் ஸ்ரீ. அ. குமாரசாமிப் புலவர் போன்ற பெரிய கல்விமான்களது தொடர்பும் உசாத்துணையும் திரு அ. க. வைத்தியலிங்கபிள்ளை அவர்களுக்கு இருந்து வந்தது. மேலும் அவர் செய்யுள் இயற்றும் வன்மையுடையவர். அத்துடன் புராணங்களுக்கு விரிவுரை கூறும் ஆற்றல் பெற்றவர். ‘செந்தமிழ்’ ‘ஞானசாகரம்’ இந்து சாதனம் ‘ஆத்மபோதினி’ ‘குரு சந்திரோதயம்’ ஞானப்பிரகாசம் முதலிய பத்திரிகைகள் வாயிவாக பற்பல அரிய விஷயங்களை எழுதி வெளிப்படுத்தியவர். சைவ சித்தாந்த சமாஜப் பிரசாரகர்களுள் ஒருவராக இருந்தவர். உரை எழுதுவதிலும் சிறந்து விளங்கினார். இணுவை மாநகரில் பெருங்கோயில் என அழைக்கப்படும், கல்யாண வேலவருக்கு ஓர் ஊஞ்சல் பிரபந்தம் பாடியுள்ளார். குறித்த கல்யாண வேலவர் திருவூஞ்சல் ஆண்டு தோறும் ரதோற்சவத்தில் மடாலய ஆராதனை வேளை ஒதி வரப்படுகிறது. இந் நூலுக்கு அணிந்துரையாக டாக்டர். உ. வே. சாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமைதயர் அவர்கள் சிறப்புப்பாயிரம் உபகரித்துள்ளர். அப்பாடல் வருமாறு:

"பாமேவு தமிழ்த் தெய்வமாகிய செவ் வேற்சடக்கைப்
பரமன் மீது
நூமேவு பேரன்பிற் சுவை மேவு மூசலொன்று சொற்
றிட்டானாற்
காமேவு மிணுவிலணி கலனுமம் பிகைபகக் கவிஞன்
முன்செய்
பூ மேவு தவப் பயனும் வைத்தியலிங்கப் பெயர்
கொள்புலமை யோனே"

திரு அ. க வைத்தியலிங்க உபாத்தியாயரவர்கள் இணுவில் பரராச சேகரப் பிள்ளையாரையும் இணுவில் கல்யாண வேலவரையும் உபாசனா மூர்த்தியாகக் கொண்டவர்கள். சிவலிங்க பூசை செய்து விசேட தீக்ஷையும் பெற்றவர். ஆலய வழிபாடு செய்வது ஒருபோதும் தவறாதவர். சைவசித்தாந்த நூற் பரவையில் அனுபவமுள்ளவர். நாவலர் காட்டிய நன்னெறி நின்று இணுவையில் சைவமும் தமிழும் வளர்த்தவர். குரு சந்தான பரம்பரையாகவே தனக்குப் பின் தனது மக்களையும் அந்நெறிநிற்கச் செய்தவர்கள். அவரது ஏக புத்திரி திருமதி தையல்நாயகி நடராசா அவர்களுக்கு வண்ணைச் சிவன் அம்பிகையின் நாமகரணம் சூட்டி விவாகமாகும் முன்னரே 1938ல் பிரவேச பண்டித பரீட்சையிலும் தமிழ் ஆசிரியர் பயிற்சியிலும் சித்தியடையச் செய்தவர்கள். மக்களுள் முதன் மைந்தனாக திரு அ. க. வை. கதிர்காமநாதன் அவர்களைத் தனக்கு பின் இணுவைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு அதிபராக்கி ஒய்வு பெற்றவர் நாவலர் சீட பரம்பரையினர் அந்த உரிமைப் பாட்டிலே தான் நாவலர் சைவப்பிரகாச மகா வித்தியாலய அதிபராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நியமனம் வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கதும்,

'பிள்ளையார் கதை' என்னும் நூலின் நான்காவது பதிப்பு வெளியிடுவதை அறிந்து இந்நூலின் உரையாசிரியர் ஸ்ரீமத். அ. க. வைத்தியலிங்கபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை எனது காணிக்கையாக அளித்து உதவுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் இப்பணி சிறக்க விநாயகப் பெருமான் பாத கமலங்களை வாழ்த்தி அமைகின்றேன்.

வணக்கம்

இங்ஙனம்

இ. திருநாவுக்கரசு

(பண்டிதர், வித்துவான், சைவப்புலவர்)

தலைவர்: இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபை

தலைவர்: அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம்

இணுவில்

25 - 12 - 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# பதிப்புரை

மும் மதத்த னொன்றொரு பெயர் தனக்கு மொய் கூந்தற்
கொம்மை வெம்முலைக் கோற்றொடிக் கொடிச்சியை யிலைவேற்
கைம் மலர்த்தனி யிள வற்குங் கலைஞெனுங் கானத்
தம்ம முந்துபுக் குறுத்தவ னடி மலர் பணிவாம்.

(தணிகைப்புராணம்)

ஸ்ரீ பரராச சேகரப் பிள்ளையார் திருவருளால், 'பிள்ளையார் கதை' 'விநாயகர் அகவல்' என்னும் இவ்விரு நூல்களும் நான்காவது பதிப்பாக வெளியிடப்படுகின்றன. முன்னுள்ள பிரதிகள் யாவும் செலவாயினமையின் பல அன்பர்கள் வேண்டுகோட்கு இணங்கி இந்நூலை வெளியிடத் துணிந்தேன். என் மூதுமை காரணமாக, அதனைத் தான் செய்வதாகக் கூறி எனது சகோதரர் ஸ்ரீ வை. அ. மூர்த்தி அவர்கள் துணிந்தார்கள். அவருடைய முயற்சியால் இஃது வெளிவரப் பிள்ளையார் கருணை பாலிப்பராக

"துன்பமுற வரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

என்ற பொய்யில் புலவன் வாய்மொழியைச் சிரமேற்றாங்கி எனது பேரனார் மஹா வித்துவான் ஸ்ரீ மாந் பொ. அம்பிகைபாக உபாத்தியாயர் எழுதிய தணிகைப் புராண உரையை சிதையவிடாது இயன்ற வரையில் பதிப்பித்து அறிஞர் உலகிற்கு அளிக்க விரும்புகின்றேன். இதுவும் திருவருட்செயல்.

இப்பிள்ளையார் கதைப் பதிப்புக்கு, நல்லை குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் ஆசியுரை வழங்கியமை போற்றற்குரியதாகும். குரு மூர்த்திகளுக்கு எனது உளங் கனிந்த அன்பையும் வணக்கத்தையும் சமர்ப்பிக்கின்றேன். மேலும், சொல்வளம் பழுத்த நல்லிசைக் கவிஞனும் அற நெறி பிறழாத் திருவுடையந்தணர் சிகாமணியுமாகிய பண்டிதமணி க. சு. நவநீத கிருஷ்ண பாரதியாரவர்களும் சிறப்புப்பாயிரம் அளித்த பெருங்கருணைத் திறத்திற்காக அப் பெருந்தகையாளருக்கு யான் என்றும் கடமைப் பட்டுள்ளேன். இன்னும் இந்நூலுக்குக் கைம்மாறு கருதாது அணிந்துரை எழுதி உதவிய. யாழ்/பல்கலைக்கழகத் தமிழ்த் துறை முது நிலை விரிவுரையாளர் ஸ்ரீமாந். எஸ். சிவ லிங்கராஜா (எம். ஏ) அவர்கள் பரோபகார சிந்தைக்கு எனது உளமார்ந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றேன். மேலும் எனது தந்தையாரின் வரலாற்றுச் சுருக்கத்தை எழுதி உதவிய அவர் மாணவனும் எனது மாணாக்கனும் ஸ்ரீ இராமுப்பிள்ளை அவர்கள் சற்புத்திரனும் பல்கலைக் குரிசிலுமாகிய திருத்திகழும் நாவுக்கரசு அவர்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவிக்கின்றேன்.

இறுதியாக, இந்நூலினை அச்சிடுவதற்கு வசதியாக பிள்ளையார் கதை, விநாயகர் அகவல், அரும்பதவுரை மற்றும் ஆசியுரை, அணிந்துரை முதலியவற்றை தட்டச்சில் பிரதிகள் செய்து உதவிய புலவரும் பிரசித்த நொத்தாரிசுமான திருநெல்வேலி திரு ச. தங்கமா மயிலோன் அவர்களுக்கும், இந்நூலைப் பிழையற அச்சேற்றி மிகவும் குறுகிய காலத்தில் யாவரும் போற்றும் வண்ணம் அழகாக அமைத்துத்தந்த ஸ்ரீ சாயி அச்சகத்தாருக்கும் எனது மனப் பூர்வமான நன்றியறிதலைத் தெரிவிக்கப் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்.

இணுவில்
26 – 02 – 94.

இளைப்பாறிய அதிபர், மூதறிஞர்,
ஸ்ரீமாந். வை. க. நாதன்
அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# அகத்தியமுனிவர் அருளிச்செய்த

# பிள்ளையார் கதை

## காப்பு

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தோனைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

## கதை

பொன்னிறங் கடுக்கும் புனறரு குடுமித்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
கந்த முமமதக் கடவுடன் கதையினைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
மந்திர கிரியில் வடபா லாங்கோர்
இந்துதவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடமணிப் பள்ளியுந் தாம்பல வமைத்துப்
புதல்வரைப் பெறுவரம் புக்கெமக் கருளென
மதர்விழி பாகனை வணங்கிநின் றேத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் புரிந்திடு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பொற்சிலை வளைத்துப் புரமெரிப் படுத்த
பரனே யன்பர் பழவினை யறுக்கும்
அரனே மறையவர்க் கருள்புரிந் திடுகென
நச்சுவேல் விழியாய் நங்குடிப் புதல்வர்
இச்சகத் திவர்தமக் கில்லை யென்றலும்
அம்பிகை மனந்தளர்ந் தருவினை யறுக்குந்
தம்பி ரான்திருச் சரணம் வணங்கி
நம்பிநோற் றுலைந்தார் நாயேன் பொருட்டால்
எம்பிரா னேயிவர்க் கின்னருள் புரிகென
மறுத்துமை யுரைத்த மாற்றம் பொறுமற்
கறுத்த வுளத்தொடு கௌரியை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழியக்
காதார் விழியாள் கையற வெய்தி
உருக்குநின் னைந்தெழுத் தோதா தொழியாக்
கருக்குழி வீழக் கடவதோ வென்று
திருத்தாள் வணங்கிச் சிறுமி யேன்பிழை
அருத்தா நீபொறுத் தருளென மொழியத்
தேங்கமழ் சடையோன் சிறிதே முறுவல்செய்
தாங்குறு துணையா யணுகுவம் யாமென
மீதார் செல்வத்து விண்ணோர் பயந்த
மாதாங் கொல்லென மாத ராகி
ஆர்கலி ஞால மழகுடன் றழைப்பச்
சீர்மலி குழலி திருவயி றுதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஆயாண் டளவுமை யாடி வளர்ந்தபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தா மகிழ்வுபெற் றீன்ற வியல்பினர்
மாணிட மறையோற்கு வதுவை சூட்ட
வாணுத றன்னை மகிழ்வுடன் கேட்கப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கல்ல
தறத்தகு வதுவைக் கணுகலன் யானென
மற்றவன் றன்னை மணமுற வெய்துதல்
பொற்றொடி மடந்தைநிற் கரிதெனப் புகல
அருந்தவ முயற்சியா லணுகுவன் யானெனத்
திருந்து நல்லறஞ் சீர்பெற வமைத்து
மணிமதுக் கமல மலர்த்தடங் குறுகி
அணிமலர்க் குழலி யருந்தவம் புரிய
அரிவைத னருந்தவ மறிகுவன் யானென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மான்மழு வேந்தும் வண்ணம தொழித்து
மாணிட யோகி மறையவ னாகிக்
குண்டிகை தன்னொ டடங்கிழக் கோலங் கொண்டு
மடமயி றவப்புரி வாவியிற் குறுகித்
தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கிப்
பண்ணுந் தவமென் பயன்வேண் டியென்னக்
கொன்றையஞ் சடையனைக் கூடவென் றுரைக்க
நன்றென நகைத்து நான்மறை யாளன்
உடுப்பது கோவண மடுப்பது சுடலை
எடுப்பது மழுமா னேறுவ தெருது
பாம்பு மெலும்பும் பலகலன் மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தருக் கன்னை
நச்சிநீ செய்தவ நகைதரு நாமுனைக்
கடிமணம் புரியக் கருதிலந் தனம்பசுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடியணி மடந்தைநிற் கிதுவோ துணிவெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் விலக்க
ஆங்கவ ளுணமுற் றயன்மனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென வணங்கிநின் றேத்திச்
சிந்துர வாணுதற் றெரிவைய ரவர்தாந்
தந்தைதா யிருந்த தடமனை குறுகி
வாவிக் கரையில் வந்தொரு மறையவன்
பாவைதன் செய்கையைப் பார்த்தன னென்றலுந்
தாடொழு தடிகளைத் தருதிரில் விடையெனத்
தோடலர் கமலத் தொடைமறை முனிவனை
மாடக யாழ்மொழி மங்கையர் கூடி
நீடிய புகழோய் நீயெழுந் தருள்கென
மைம்மலர்க் குழலி வந்தெமை யழைக்கின்
அம்மனை புகுவ னென்றந்தணன் கூறப்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கெனச்
சிற்றிடை மடந்தை சீறின ளாகி
மற்றம் மாதர் மதிமுக நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துத லரிதென
மணமிடா தொழியினு மாதவ முனியை
இணையடி தொழுதிட லுலகிய லாமெனத்
தந்தையுந் தாயுந் தாழ்ந்துநின் றுரைப்பச்
சிந்தை கரைந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
நாயகி யதற்கு நன்றென விசைந்தே
ஆயிழை மடந்தை அவனெதிர் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தழ்த் தாமரைச் சீறடி பணிந்து
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்தபின்
பொற்பமர் பலகையிற் பொலிவுற விருத்தி
வண்ணப் பரிபுர மலரடி யவற்கங்
கெண்ணெய்க் காப்புடன் இயைந்தன சாத்தி
மஞ்சன மாட்டி மணித்துகில் புனைந்து
விஞ்சிய தவிசின் மேற்பட விருத்தி
ஆடகப் பெருங்கலத் தறுசுவை யடிசில்
சூடகக் கையார் துலங்கப் படைக்க
அந்தண னமுதுசெய் தருளிய பின்னர்ச்
சந்தனங் குங்குமஞ் சாந்தொடு பனிநீர்
இந்தன நுதலார் இயல்புடன் கொணர்ந்து
செந்துவர் மேனியிற் றிகழச் சாத்திச்
செவ்வந்தி செண்பகஞ் செங்கழு நீரொடு
திவ்விய பிறவுந் திருமுடி சாத்தித்
தக்கோ லத்தொடு சாதிக் காயுங்
கர்ப்பூ ரத்தொடு கலந்தவெள் ளடைகாய்
ஒள்ளிய பலவு முவந்துடன் வைத்து
வள்ளிநுண் ணிடையார் வணங்கி நின்றபின்
ஆங்கவ ரருத்திகண் டகமிக மகிழ்ந்து
பூங்கொடிக் கினியருள் புரிகுவன் யானெனக்
கற்றைச் சடையுங் கங்கையும் மதியமும்
நெற்றியி னயனமும் நீல கண்டமுங்
கரமிரு நான்குங் கன்றுமான் மழுவும்
உரக்கங் கணமு மொப்பிடற் கரிய
பவள மேனியிற் பாங்குற வணிந்த
தவளவெண் ணீறுந் தயங்குமுந் நூலுங்
கோவண விடையிற் கொடுஞ்சின வேங்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவணை மான புலித்தோ லுடையும்
ஏழை யடியா ரெழுபிறப் பறுக்குந்
தாளிடைச் சிலம்புஞ் சதுர்மறைச் சிலம்பும்
மாலயன் றேடியுங் காணா வடிவும்
பாலினன் மொழிக்குப் பரிந்து காட்டலுந்
தாமக் குழலி தனைப்பயந் தவர்கள்
ஏழுற் றார்களி னெழுமடி மகிழ்ந்து
பாவையைப் பெற்றுப் பயன்பெற் றோமெனக்
காவணை மிட்டுக் காலுறப் புனைந்து
பஞ்சினும் பட்டினும் பழுதற விதானித்து
மஞ்சுசூழ் கூட மதில்வாயி லெங்கணுந்
தோரண நாட்டித் துகிற்கொடி யெடுத்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துக்
கரும்புங் கமுகுங் கதலியும் நிரைத்துக்
குரும்பையந் தனத்தியைக் கோலஞ் செய்து
சங்கர னெங்கள் தார்குழல் தனக்கு
மங்கல நாணிடு மணநா ளின்றெனத்
தங்குலான் முரசு சாற்றென வள்ளுவன்
மங்கல முரசு மறுகுதோற் றறைதலும்
மாலயன் முதலிய வானவ ரெல்லாம்
ஆலமர் கடவுள் அணிமணங் காண்பான்
விரும்பிவந் தீண்டி விமலனை யெதிர்ந்தே
அரும்பவிழ் தாமரை அடிவணங் கியபின்
வலம்புரி முதலா மன்னுவாத் தியங்கள்
புலம்பு கடலென வடங்கா தார்ப்பக்
கொங்கலர் தாமரைக் கொடியிடை தன்கங்
கங்கு ரார்ப்பன வருந்தொழின் முடித்தபின்
வார்சடை யானையும் மடமயி றனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்தனி யாதனைத் துவந்துட னிருந்தி
விதிமுறை சடங்கு விரிஞ்சன் பேணப்
புதியமங் கலநாண் பூட்டி யருமறை
ஆகம நூல்வழி யாகுதி வேட்டபின்
கோகன கக்கொடி கொழுநன் முதலோர்
குரவார் கூந்தற் கொடியிடை தன்னுடன்
அரவார் கண்டனுக் கறுகுபா லேந்த
அரிவையு மிறைவனும் ஆகுதி வலம்வந்
துரிய மணவறை யுட்புகுந் தருளி
அரம்பையர் வாழ்த்த அமளியிற் றுயில்கொண்
டுரம்பயில் கதிரோ னுதயஞ் செய்தபின்
விண்ணோர்க் கெல்லாம் விடைகொடுத் தருளிப்
பண்ணேர் மொழிமடப் பாவையை நோக்கி
ஓதநீர் வேலிசூழ் உஞ்சையம் பதிபுகப்
போதுக வென்று போகிய அந்நாள்
இளமதி யணிசடை யெந்தைதன் னருளால்
வளமுடன் வழியின் மலைச்சா ரலிலோர்
களிறும் பிடியுங் கலந்தது காணு
ஒளிர்மதிச் சடையோன் உமைமுகம் நோக்கி
ஓர்வழி யன்றிமற் றோர்திசை தன்னைப்
பாரா தேவா பணிமொழி யாயென
வாரார் முலையாள் மற்றுமுன் போவென
மெல்லிய லுமையவள் விரும்பினள் பார்த்தே
அல்லிசேர் குழலா ளரன்முகம் பாரா
இவ்வகை யாக வேண்டு மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகளி றுரித்தோன் மதகளி றுருவும்
மதர்விழி யுமைபிடி வடிவ மாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய கல்வியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெடுநிலை போற்றத்
தங்குவெண் ணீறுந் தருமமுந் தழைப்பத்
திங்கள் மும்மழை யெங்கணும் பெருக
முண்டக மலர்போன் முழுதுஞ் சிவந்த
தண்டையுஞ் சதங்கையு மலம்பு தாளிணையுங்
குண்ட வண் டியுந்தண்டரள மாலையு
மண்டொளி தழைத்த புண்டர நுதலு
முடிவுகண் டறியா முப்புரி நூலுஞ்
சுடர்விடுங் கனகத் தோளொரு நான்குஞ்
சோதிவண் டரளத் தொடைபுனை கழுத்தும்
பூதலம் புரக்கும் பொற்கரி முகமும்
தவளக் கிம்புரி தருமருப் பிரண்டும்
பவளத் தொளிவாய்ப் பைந்துவ ரிதழும்
இமையா முக்கணும் இருதழை செவியும்
அமையா நிலவுமிழ் அவிர்சடை முடியும்
அந்தி வண்ணமும் அங்குச பாசமும்
உந்திச் சுழிமேல் உதரபந் தனமுடன்
ஐங்கரக் கரிமுகன் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்தோன் புதல்வனை நோக்கி
வானோர் மண்ணோர் வந்து வழிபட
ஆனோர் வல்வினை யாசற வகற்றித்
தண்டுள வோனயன் சதமகன் முதலோர்க்கு
இன்றுமுதல் இறையாய் இருத்தியென் றருளித்
தெய்வநா யகியாந் திருந்திழை யுமையுடன்
மைவளர் சோலை மாநக ரம்புகுந்து
அமையாக் கூட்டத் தனேக ங்காலம்
இமையா முக்கண் இறையிருந் தருளினன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாள் தன்னில் அசுரர்வந் தடைந்து
பொன்னு டரசுசெய் புரந்தரன் முதல
இமையவர் தங்கட் கிடரே செய்ய
இமையவர் தலைவனு மிலேகரு மாலும்
மதுமல ரயனொடு வந்தெம் பிரான்றன்
பதிதனி லணுகிப் பரிந்துநின் றேத்தித்
தம்பி ரானைத் தாளினை வணங்கி
எம்பி ரானே யெங்குறை முடியெனச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கடல்பரு கயில்வேல் கைத்தலத் தேந்தும்
புதல்வனைப் பயந்து தருகுவம் யாமென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தாடலும்
தேடிய வானோர் நேர்ந்துடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுடன் அழைத்துக்
காவலர் சாரற் கயிலையிற் சென்று
சூரன் வன்மையுஞ் சுரர்படு மிடுக்கணும்
ஊரர வணிந்தோற் குணர்த்திடு நீயெனக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சலும்
ஏமநாட் டரசன் இயல்புடன் நவில்வான்
அஞ்சா தேநீ யவன்முன் செல்ல
நஞ்சார் கண்டன் நயன மூன்றினுள்
நெற்றியி னயன நீயா மாதலிற்
குற்றம்வந் தடாதுநீ கூறுதி சென்றென
வானவன் மொழிய மற்றவன் றானும்
ஈனமின் றுமென விருதய மொருப்பட்டு
எனையா ளிறைவன் உமையா ளுடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகத்
தெள்ளுதேன் மொழியாள் திகைத்து நாணுறப்
பாவகன் வரவு பரமனு மறிந்துதன்
மூவிரு நுதல்விழி மூளரியி னுதித்த
அறுமுகப் பொருளை யவன்கையி லளித்தலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதிநீண் முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் வலக்கையிற் கொடுப்பப்
போர்புனை வாயுவும் பொறுக்கவொண் ணுமற்
தார்புனற் கங்கைதன் கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணுமற்
பொரும்புனற் சரவணப் பொய்கையி லிடுதலுஞ்
சரவணக் கமலந் தனினிலை யுற்றுக்
குரவணி மூவிரு குருமணி மகுடமுந்
தோளிரண் டாறுந் துலங்குருண் டலமுந்
தாளிரண் டுடனே தாமரை வதனமும்
மலையுந் தானவர் வாழ்வினைத் தொலைத்திடுஞ்
சிலையும் வேலுஞ் செஞ்சர முங்கொண்டு
அறுமுகக் கடவுள்வந் தவதரித் திடுதலுங்
கறைமிடற் றிறையொடு கௌரிசென் றெடுத்துத்
தம்பதி யடைந்த சதமகன் முதலிய
உம்பர்சீர் அருளென உயர்விடை வழங்க
வாரந் திகழுஞ் சீர்புனை வெற்புஞ்
சூரன் மார்புந் துளைபடத் துளைத்தே.
அமரர் கோவுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்கிட
அமரா வதியின் அமர்ந்தினி திருந்தபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர வேலுடைத் தாரகன் றன்னைக்
கண்டுள மயங்கிக் கடவுளர் மகளிர்
விண்டனர் போன்று மெலிவது கண்டே
அண்டரெல் லாம்வந் தடைவுடன் கூடி
மாதொரு பாகன் மலரடி வணங்கித்
தாதணி கொன்றைச் சடைமுடிக் குன்றே
பிறவா தவனே பேரருட் கடலே
இறவா தவனே யிமையவர்க் கரசே
மருவளர் கடம்பன் மாநகர் புகாமல்
அருளல் வேண்டும் அமலவென் றிறைஞ்சி
இமையோர் சொல்ல இறைவனும் வெகுண்டு
குன்றெறி சுடர்வேற் குமரனை முனியக்
காவல்கொண் டோர்வினைக் கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திட அவள்தனை வானவன் நோக்கி
மங்கை நீதான் வருந்துத லொழிகெனச்
சக்கர பாணியைச் சான்று விருத்தி
அக்கணி மார்பனும் ஆயிழை யுமையும்
மிக்குநற் சூது விருப்புட னாட
மன்றலர் கூந்தல் வென்றுமன மகிழ்ந்து
குன்றிறல் விளவெறி கண்ணனை நோக்கிச்
சூதினில் வென்றா ராரென மொழிய
ஆதிவென் றாயிழை தோற்றா ளென்று
தாதிமி ரளகத் தையலை நோக்கி
நீதி யில்லா நெறியவ னுரைக்க
மலைமகள் வெகுண்டு மற்றவன் றன்னை
நிலமிசைக் குருட்டுப் பாம்பாய் நீபோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரணை முகத்து மதலைமுன் னிருந்த
வேரணி யாலிற் கீழ்க்கிடந் திடுகென
நாரணன் ருனு நாகமாய்க் கிடந்தபின்
சீரணி கரிமுகத் திருமுகக் கடவுள்
கரும்புங் கிழங்குங் கதலியும் வருக்கையும்
விருப்புமாங் கனியும் வேண்டுவ வளித்து
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழிறிக ழாலின் கீழினி திருந்த
கம்பமா முகக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநா லேணியிற் ருரணி குறுகிக்
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திப்
பொரியவ லடைகாய் பொற்புற வைத்துக்
கார்த்திகைக் கார்த்திகை கழித்த பின்னுள்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கித்
திருவைத் தோய்ந்த திகழ்மணிப் புயத்தில்
இருபத் தோரிழை இன்புறக் கட்டி
வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதி நாயகற் காகிய வெழுத்தொடு
மூன்றெழுத் தாலே மொழிந்த மந்திரந்
தேன்றிகழ் குழலியர் சிந்தையு ளடக்கிப்
பொருவரு மலரடிப் பூசனை புரிந்தே
இருபது நாளு மிக்கதை கேட்டு
மற்றைநா டன்னின் மதிமுக மலர்விழிக்
கற்றை வார்குழற் கன்னிய ரெல்லாம்
வாரணை முகத்தவன் வாழ்பெருங் கோயில்
சீருடன் விளங்கத் திருவிளக் கிட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமயங் கொண்டு குறைவற மெழுகி
ஏழுறு கரும்பும் எழிலுடைக் கதலியுந்
தாளுடைக் கமுகுந் தழைபடு மஞ்சளுஞ்
சேறுடைச் செந்நெலுந் திசைதொறு நிரைத்தே
கோசிகங் கோடிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடந் திருத்தி
ஐங்கரன் றிருவுரு அமைத்துள் அன்பொடு
தெங்கிள நீருஞ் சீர்பழுக் காயும்
விரிந்த பாளையும் மேதகு நீர்பூச்
சொரிந்த கேதகை தொல்கனி யுடனே
பொருந்திய கவரி புனைமணி மாலை
தெரிந்தவை யெல்லாந் திருந்தத் தூக்கி
மலைமகள் மதலையை மஞ்சன மாட்டிப்
பலநிறப் பட்டும் பழுதறப் புனைந்து
சிந்துர நுதலிற் செறிந்தபொற் பட்டமும்
இந்திர தனுவென இலங்குமணி யாரமும்
மகரப் பகுவாய் வாகு வலயமும்
நிகரற வொளிவிடு நித்தில மாலை
திகழ்மணி முடியொடு சிலம்புசெஞ் சதங்கை
புகரறு பூண்கள் பொலிவுறப் பூட்டிச்
சந்தனங் குங்குமஞ் சாந்தொடு பனிநீர்
இந்தன நுதலார் இயல்புடன் கொணர்ந்து
செந்துவர் மேனியிற் றிகழ்தரச் சாத்திச்
செருந்தி செண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்குகுன் றுத்தி
தாதகி பாதிரி தாதுமந் தாரம்
மாதவி கடம்பு மகிழ்சிறு ஞாழல்
நெய்த றுபிலை நீலந் தாடிமங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொய்திடு குல்லை கொன்றை பைங்குரவு
நரந்தை யலரி நந்தியா வர்த்தங்
கரந்தை கமலங் கமழிரு வேலி
செவ்வந்தி பிச்சி சிறுசண் பகமலர்
மவ்வல் செவ்வல்லி மயிலை யிருவாட்சி
தும்பை யறுகு துழாயிரும் பூளை
வம்பலர் பட்டிகை மத்தமோ டெருக்குக்
காந்தாள்கூ தாளங் காக்கண மடம்பு
மாந்தளி ருடனே வளர்பஞ்ச வில்வம்
பூந்தொடை களபம் புழுகுகத் தூரி
ஏந்தின முலையா ரிசையச் சாத்திக்
கதிர்நெற் பொரியுங் கண்டசர்க் கரையும்
முதிர்நெற் கட்டியும் முரித்ததின் கரும்புந்
தேங்காய் செவ்விள நீர்பல கிழங்கு
மாங்கனி வருக்கை வாழைப் பழமும்
எட்பொரி யிருவி யிருங்கனி மாவும்
அப்பமும் அவலும் ஆலங் காயும்
வெள்ளிலை யடைக்காய் விரவுகர்ப் பூரமோடு
ஒள்ளிய பலவு முவந்துடன் வைத்துப்
பல்லிய மார்க்கப் பழுதறு திருவிளக்கு
எல்லியும் பகலென இருளற விளங்கக்
கற்பகக் கடவுள் களிப்புறச் செய்து
மிக்க புகழை விருப்புட னுங்கவர்
கேட்பது கண்டு கேளா திருந்த
பாப்புரு வாகிய பழமறை யாளன்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனெனக்
காப்பிடு வித்துக் கனிவகை பலவும்
ஆங்கவன் றனக்கு வேண்டுவ கொடுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்குடன் இக்கதை பரிவுடன் கேட்டபின்
தெய்வ மங்கையர் சிந்தித் தவைபெற
வையநா யகியால் வாளர வானவன்
பண்டையின் வண்ணம் பார்மிசை யெய்தி
அண்டர் நாயகன் அரிவையோ டிருந்த
உஞ்சைமா நகர்புகுந் துமையடி வணங்க
வெஞ்சின மிகுத்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபநீக் கினன்மறை யோனென
மானன கண்ணி மனக்கத வடைக்க
இறையவ னிதற்குக் காரண மேதென
மறையவ னுரைப்பான் மற்றுமுன் மதலை
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தையுண் மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றா ணீங்க
யாங்கதை கேட்போ மெனநினைந் தருளிச்
சக்கர பாணி தான்கதை சொல்ல
அக்கணி மார்ப னன்புடன் கேட்ப
மாதுமை யடைத்த வன்றா ணீங்க
மாதுமை தன்னை யரனகை செய்ய
நானே வரநீ நகைபுரிந் ததுவென்று
தேனார் சடையாய் தெளியச் செப்பெனப்
பொன்மலை முலையாய் புகலக் கேளாய்
உன்மகன் நோன்பின் உறுதியை யறிந்து
சிந்தையுண் மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் லானை ஆயிழை வணங்கித்
தேங்கமழ் கடம்பன் தேவர்சே னாபதி
ஈங்கு வரும்படி யானுநோற் பேனென
இறையவன் கதைசொல வேந்திழை கேட்டபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறமட மகளைக் குலமணம் புணர்ந்து
சரவண சம்பவன் ருன்வந் தெய்தி
அரவணி அமலன் அடியிறைஞ் சியபின்
பரிவுடன் இக்கதை பார்தலந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிர மார்க்கன்
தன்பெரு மனையுந் தானுமிக் கதையை
அன்புடன் கேட்டே அரசு பெற்றபின்
மற்றவ னகரின் மடந்தையர் தம்முள்
எற்பிறை நுதலாள் இலக்கண சுந்தரி
கழைபொரு தோட்கையிற் கட்டிய விழையை
விழைவில ளாகி விதிவழி களைந்து
வற்றிய கொவ்வையின் மாடே போடக்
கற்றையஞ் சடைமுடிக் கரிமுக னருளால்
ஆங்கது தளிரும் அடைவுடன் பூவும்
நீங்கறப் பொலிந்து நிற்பது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த
பூப்பயி லுங்குழற் பொற்றொடி யொருத்தி
கொவ்வை யடகது கொய்வாள் குறுகிச்
செவ்விய வரசன் றேவிமுன் போட்ட
இழையதிற் கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழையோ டிகல்விழிக் கோதைமுன் காட்ட
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்தி
இருவினை தீர இந்நோன்பு நோலென
அப்பமோ டடைகாய் அந்நாட் கொண்டு
புட்பமுன் வைத்து உவந்து நோற்றபின்
பண்டையி னிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசன் கோயில்வைத் தனனே
விக்கிர மார்க்கன் விழிதுயி லளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சதங்கையுந் தாளிநின் றொலிப்பக்
கொண்டல் போல்வரும் குஞ்சரக் கடவுள்
கலைக்குல வரசன் கனவில் எய்தி
அலக்க ணெய்து மரசர்க ளரியே
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடப் புறத்தெனத்
துண்ணென விழித்துக் துணைவியை நோக்கி
அண்ண லுரைத்திடு மளவை தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிந்து
மாநகர் கேடுறும் வகையது கண்டே
அணியிழை யாளை அயன்மனை யகற்ற
வணிகன் றன்மனை புகுந்தவ ளிருப்ப
மணியும் முத்தும் வன்கல் லாய்விட
அயன்மனை யவனும் அகற்றிய பின்னர்
மயிலியன் மேனி மடந்தையுண் மறுகிக்
குயவன் றன்மனை புகுந்தவ ளிருப்பக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனும் அகற்றிய பின்னர்க்
குயிற்பெடை நிகர்மொழிக் கோதையு மேங்கித்
தூசுக ளார்க்குந் தொழிலோன் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்துவே றாய்விட
ஆசறை யவனும் அகற்றிய பின்னர்க்
காசறை யளகக் காரிகை புலம்பி
மாலைக் காரன் மனையிடை புகுந்தபின்
மாலை பாம்பாம் வகையது கண்டே
அயன்மனை யவனும் அகற்றிய பின்னர்ப்
புயலின் வார்ந்த பூங்குழல் வாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவன் றன்மனை புகுந்தவ ணிருப்ப
வளர்பயி ரழிந்துபல் வளமுங் குன்றவும்
புரிகுழ றனைப்புறம் போவென் றகற்ற
அவ்வை தன்மனை புகுந்தவ ளிருப்ப
அவ்வை சென்ற அகங்க டோறும்
வைதனர் எறிந்தனர் மடியத் தள்ளினர்
கைகொடு குத்தினர் கள்ளியென் றியம்பினர்
அவ்வகை சால அறிவு தளர்ந்து
வவ்விய துயரொடு மனையிடை புகுந்த
கன்னியால் வந்த காரண மிஃதென
பின்னின் நுண்ணிடை மெல்லிநல் லாளே
சாணக மெடுத்து வாவெனப் புகலச்
சாண கத்தைத் தையல்சென் றெடுக்கச்
சாணகம் புழுவாய்த் தண்ணீர் வற்றிப்
பேணிய வெல்லாம் பெரும்புழு வாக
மானேர் விழியாள் வருந்தக் கண்டு
தானே சென்று சாணக மெடுத்துக்
கோல மாகக் கொழுந்தரை மெழுகிப்
பாலின் மென்மொழிப் பாவையை நோக்கிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் புரிந்துநின் றாடக்
கொவ்வை யிதழ்வாய்க் கொடிவிழுந் தேங்க
அவ்வைதா னவளை யஞ்சலென் றழைத்துப்
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
முத்தமி ழறிந்த மூதறி வாட்டி
நவநெறி பிழைத்த தையலே நீதான்
சிவன்மகன் நோன்பு தெளிவுறப் புரிகெனப்
பொரியவ லடைகாய் முதற்பல பொருள்களுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுறப் படைத்துச் சீர்வழி பாட்டுடன்
செவ்விய கரத்திற் றிருந்திழை யாத்தே
அவ்வையு மேழ்தினம் அருங்கதை சொல்ல
மவ்வலங் குழலாள் மனமகிழ் கூர்தரச்
செவ்வியோ டக்கதை தெளிவுறக் கேட்டபின்
பொற்புறு விநாயகர் பொலிதிரு வருளால்
விக்கிர மார்க்கன் வேட்டையிற் சென்று
தண்ணீர் வேட்டுத் தன்கிளை விடுப்ப
உண்ணீர்க் கரக முவப்பமொண் டுடனே
பண்ணேர் மொழியாள் பரிந்துடன் கொடுப்பச்
சேனையுந் தானுந் தேக்கிட வுண்டே
யானை குதிரை யவைகளு மருந்திப்
பின்னுந் தொலையாப் பெருமையைக் கண்டு
கன்னிகை யிடத்திற் கடிதி னடைந்துநீ
யாரென வினவ விளமயிற் சாயலாள்
பேருரை யாதுநாண் பெருகநின் றிடலும்
மின்னே ரிடையன நடைமெல் லியலைத்
தன்மனை யாளெனத் தரணிப னறிந்தே
ஒண்டே ரேற்றி யுளமகிழ் வதனுடன்
கொண்டூர் புகுந்த கொற்ற வேந்தன்
தலைநம் பிராட்டித் தலைமைபெற் றுயர
நிலையருள் புரிந்த நிமலா போற்றி
கற்பவர் தலைவ போற்றி கருதுவோர் கண்ணே
போற்றி
நற்பத மவர்க்கு நல்கு நாயகக் களிறே போற்றி
பொற்கர மைந்தாய் போற்றி புகர்முகக் குன்றே
போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்பமாய் மகத்தாய் நின்ற ஆகுவா கனனே போற்றி
அன்றுநீ டவனித் தேரை அச்சறுத் தமரர் போற்ற
நன்றருள் புரிந்த வேத நாயகக் களிறே போற்றி
பண்டுதான் மேரு வெற்பிற் பாரத மெழுதி வைத்த
வண்டமிழ் முதல்வா விண்ணோர் வணங்குமா முகவா போற்றி
ஈண்டுமாங் கனியை வேண்டி இறைவனை வலஞ்செய் தங்கள்
நீண்டகை முதல்வா என்று நினைப்பவர் தலைவா போற்றி
ஏத்துவார் முதல்வா போற்றி இறையவன் புதல்வா போற்றி
சீர்த்தநல் லுமையா ளீன்ற செல்வனுஞ் சிறுவ போற்றி
அன்பொடு பரவிநாளும் அடிதொழு வார்கட் கெல்லாம்
துன்பம் வாராமல் இன்பே தோன்றநின் றருள்வாய் போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி
எண்ணுறுந் தாரக வெழுத்தே போற்றி
ஆறணி சடையோன் அருளே போற்றி
நீறணி மேனி நிருமல போற்றி
கரமைந் துடைய களிறே போற்றி
பரமன் றருநம் பாலா போற்றி
செய்யதாள் போற்றி போற்றி திரிபுரஞ் செற்றோன் பெற்ற
ஐய, என் வினைகள் தீர்த்தே அஞ்சலென் றருளுவாயே.

* ❁ *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பயன்.

கல்லா தவர்நோற்பிற் கற்பவைநன் றாகவுறும்
இல்லா தவர்நோற்கின் இன்மைபோம் — பொல்லாத
பாவம்போம் மிக்க பழவினைநோய் தானும்போம்
வேகமலம் போமே மிக.

வெள்ளை யெருதேறும் விரிசடையோ னீன்றளித்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை — உள்ளபடி
கற்றவரும் நோற்றவருங் காதலுடன் கேட்டவரும்
பெற்றிடுவார் கற்பகத்தின் பேறு.

பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்து நீண்மௌலிக்
கற்பகத்தின் நோன்பைக் கருத்துடனே — சொற்றபடி
நோற்றோர் மிகவாழ்வர் நோலா திருந்துகதை
கேட்போர்க்கும் வாராது கேடு.

அகத்திய முனிவர் அருளிச் செய்த
பிள்ளையார் கதை
முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

## ஔவையார் அருளிச் செய்த
## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
இருவடி வைத்துத் திறமிது பொருளென,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியிற்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கக் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவா யப்பா லுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

ஔவையார் அருளிச் செய்த
விநாயகர் அகவல் முற்றிற்று.

அத்தி முகவனை நித்த நினைபவர்
சித்த மகிழ்வொடு முத்தி பெறுவரே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பிள்ளையார் கதை

## அரும்பதவுரை

### காப்பு

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

இதன் பொருள்: திரு ஆக்கும் - அருட்செல்வத்தைத் தந்தருளுவார், செய்கருமங் கைகூட்டும் - செய்யும்படி தொடங்குந் தொழில்களை இடையில் யாதொரு விக்கினமுமின்றி முற்றுறச் செய்தருளுவர், செம் சொல் பெருவாக்கும் - செம்மையாகிய சொற்கள் நிறைந்த பெரிய வாக்குச் சாதுரியத்தையும், பீடும் பெருக்கும் - புகழையும் மேன்மேலும் பெருகச் செய்தருளுவர், உரு ஆக்கும் - நல்ல சரீரத்தைத் தந்தருளுவர், ஆதலால் - இங்ஙனம் (வேண்டுவார் வேண்டுவன வேண்டுழி வேண்டுழி எதிர்நின்று கொடுத்தருளும் வள்ளற்றன்மையுடையோராகிய) அக்காரணத்தால், ஆனைமுகத்தானை - யானை வதனத்தையுடைய விநாயகக் கடவுளை, வானோரும் - (மண்ணுலகத்தாரேயன்றித் திருமால் முதலாகிய) விண்ணுலகத்தாரும், காதலால் தம் கை கூப்புவர் - பேரன்போடு தங்கள் கரங்களைக் குவித்து வணங்குவார்கள் என்றவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆல் உருபு ஒடுருபாகத் திரித்துப் பொருள் உரைக்கப்பட்டது. ஆக்கும், கூட்டும், பெருக்கும் என்பன செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று. வானோரும் என்புழி உம்மை எச்சம். உயர்வு சிறப்பு எனினுமாம். பெருவாக்கும் பீடும் என்புழி உம்மை எண். வாக்கு ஆகுபெயர்.

இத்திருவெண்பாவான் வழிபடற்குரியார் இவரென்பதும், வழிபாடு செய்வோரடையும் பயனுங் கூறப்பட்டமை காண்க. அருட்செல்வ முள்வழியே ஏனைச் செல்வங்களு முளவாதற் சிறப்பு நோக்கித் திரு என்றதற்கு அவ்வாறு பொருளுரைக்கப்பட்டது. பீடும் பெருக்குமுருவாக்கும் எனக் கொண்டு தெய்வத்தன்மையை வருவிப்பார். நல்ல உருவத்தையுந் தந்தருளுவார் எனப் பொருள்கூறலுமொன்று. தெய்வத்தன்மை என்றது தெய்வத்திற்குள்ளதாம் தேஜஸ். அது என்றும் புலனுதலின்றி ஒரொருகாலருகித் தோன்றுவது "முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை, யெம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்" என்பது விதியாதலின் ஆக்கும் என நிகழ்காலத்தாற் கூறினர். தம்மை வழிபாடு செய்பவர் எவ்வெச் செல்வங்களைப் பெற விரும்புகின்றார்களோ அவ்வச்செல்வங்களைக் கொடுத்தருளுதல் இறைவராகிய விநாயகப் பெருமானுக்கு இயற்கையேயமைந்துள்ள பேருட்குணமாதலின் அதனைத் தெற்றென விளக்குவார் அப்பொருள் பயக்கும் மங்கல முதன் மொழியாகிய திருவை முன்னர்த் தந்து திருவாக்கும் என்றும், திருவருளை முன்னிட்டு அதன் வழியே ஒழுகின் சகல முயற்சிகளும் தப்பாது கைகூட்டல் ஒரு தலையென்பார் செய்கருமங் கைகூட்டும் என்றும், பகை, நொதுமல், நட்பு என்னும் முத்திறத்தார்

மாட்டும் ஒரு நிகரவாய்ச் செம்மைப்பொருள் பொதிந்து வரும் சொல்லென்பார் செஞ்சொல் என்றும், இங்ஙனம் பொருள் பொதிந்த சொற்களையுடைய வாக்கு ஏனை வாக்குப் போல வீண் போகாது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வத் தொழிலையும் பயந்து விடுதற் சிறப்பு நோக்கி பெரு வாக்கும் என்றும். புகழொன்று மாத்திரமின்றேல் இவற் றூற் பெரும் பயன் கோடலின்று மாதலின் அதன் இன்றி யமையாமைச் சிறப்பினை விளக்குவார் பீடும் என உம்மை கொடுத்தும், அதுவும் என்றும் ஒரு பெற்றித்தாயிராது மிக்கு மிக்குப் பெருகி தன்னையுடையானுக்குக் கழிபேரு வகையைக் கொடுத்து நாடோறும் வளர்ந்து வருதலின் பெருக்கும் என்றும், விநாயகக் கடவுள் தம்மை உபாசனை செய்வோருக்கு, பிணி மூப்பு இறப்புக்களான் நலியும் ஏனை யோர் உடம்பு போலாது என்றும் ஒரு பெற்றித்தாம் சரீ ரத்தைக் கொடுத்தருளுவார் என்பார் உருவாக்கும் என்றும். வழிபடற் காரணங் கூறுவார் ஆதலால் என்றும், திருமால் முதலாகிய தேவர்களுக்கும் ஆதியாகிய தேவன் இவரே என்பார் வானோரும் என்றும் மந்திரராஜமாகிய பிரணவத்தையே தமது திருமுகமாகக் கொண்டு பிரபஞ் சத்தைத் தொழிற்படுத்துவார் இவரே என்பார் ஆனை முகத்தானை என விதந்தும், அன்பு உள்வழியேயன்றி அன்பு இல்வழி ஒன்றுஞ் சித்தியாதென்பார் காதலால் என்றும், மனத்தானினைத்தலும், வாக்கானறுதித்தலும், காயத்தால் வழிபடலு மடங்க, கைகூப்புவர் என்றுங் கூறியருளினார். வானோரும் என்பதற்கு, இந்திரன் முதலாகிய தேவர்களும் எனப் பொருள் கூறினுமாம்.

1. கடுக்கும் - ஒக்கும். குடுமி - மலையினுச்சி

2. தென்மலை - பொதியமலை. இது பாண்டிநாட்டின்கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பொதுவிடமா யிருத்தலின் பொதியில் எனவும் பெயர்பெறும். இறைவன் இறைவியை வதுவை புரிந்தஞான்று உத்தரந் தாழ, தெக்கிணம் உயர அதனைச் சமஞ் செய்யும்படி அகத்தியமகா முனிவர் சென்றுறைந்த இடம் இதுவே. முனிவரன் - முனி சிரேட்டன் என்றது அகத்தியரை.

3. கந்தம் - வாசனை, மும்மதக்கடவுள் - விநாயகக்கடவுள். யானை உறுப்புக் கழுத்துக்கு மேலன்றி இன்மையின் மும் மதத்தனுதல் சாலாதென்பார் கூற்றை மறுத்து யானை வடி வாகச் சென்றமையின் மும்மதத்தனுதல் சாலுமெனத் துணிவு பற்றிக் கூறினார் எனவுணர்க.

5. மந்தர கிரி - மந்தரமலை. அட்ட மலைகளுள் ஒன்று.

6. இந்து - சந்திரன்.

7. அந்தணன் - பிராமணன். "அந்தத்தை அணவுவான் அந்தணன் என்றது, வேதாந்தத்தையே பொருளென மேற் கொண்டு பார்ப்பான்" என்பர் நச்சினார்க்கினியர்.

10. பள்ளி - முனிவர்வாசம். தவத்தோருறையுமிடமுமாம்.

12. மதர்விழி - தருக்கிய கண்.

15. பொற்சிலை - பொன்மலை என்றது மேருமலையை. புரம் - நகரம்; என்றது இரும்பு, செம்பு, பொன் இவற் றுளாய மூன்று மதில்களையுடைய மூன்று நகரங்களை; இவை ஆகாயத்தியங்கும் தன்மையை உடையன. "பொற்சிலை வளைத்துப் புரமெரிபடுத்த பரனே அன்பர் பழவினையறுக்கு மரனே" என்றமையான், இறைவனது அறக்கருணையினையும் மறக்கருணையினதும் சிறப்புக் கூறியவாறு.

17. மறையவர் - தவம்புரிந்த பார்ப்பானும், பார்ப்பனியும்.

18. நச்சுவேல் - நஞ்சு பூசிய வேல்.

19. சகம் - பூமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. அம்பிகை - உமை. உலகத்துக்குத் தாய் என்றபடி.
25. கவுரி - பார்ப்பதி. வெண்ணிறமும் பொன்னிறமு மமைந்த திருமேனியையுடையவள்.
26. பேதாய் - முன்னிலை விளி. பேதை என்பது ஈண்டுப் பருவமுணர்த்தாது பெண்மையை உணர்த்தி நின்றது.
27. காதார்விழி - காதளவோடிய கண் கையறவு - துன்பம்; உதவி இன்மையுமாம்.
28. ஐந்தெழுத்து - பஞ்சாக்கரம். ஒழியாக்கருக்குழி - மாறி மாறி வருகின்ற பிறவிவழி.
29. கூடவதோ - கூடியதோ.
30. திருத்தாள் - திருவடி.
34. மீதார்செல்வம் - போக பூமியிலுள்ளார் துய்க்குஞ் செல்வம். அழியாச் செல்வமெனினுமாம்.
35. கொல் - வியப்பைத்தருவதோர் இடைச்சொல். ஆங்கொல் - ஆகும்போலும். ஆம் என்றது, ஆகும் எனப்பொருள்படுஞ் செய்யுமென் வாய்பாடு.
36. ஆர்கலி - சமுத்திரம்.
44. பிறப்பிறப்பில்லாப் பெரியோனுக்குச் செய்யும் அறத் தகு வதுவைக்கு இயைவதேயன்றி ஏனையோருக்குச் செய்யும் வதுவைக்கு இயையேன் என முடிக்க.
46. மற்றவன் என்றது பிறப்பிறப்பில்லாப் பெரியோனை.
49. அறம் - அறச்சாலை.
53. தண்டு - திரிதண்டு; என்றது மூன்றுகோல் ஒருங்க மைத்துச் செய்யப்படுமதனை, அரன் அயன் அரி என்னும் மூவரும் ஒன்றே என அமைந்தமையின் முக்கோல் எனவும்படும்.
57. மடமயில் - இளம்பெண்.
58. தண் நறும் கூந்தல் - குளிர்ச்சியும் நறுமணமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய கூந்தல்.

60. கொன்றை - திருக்கொன்றைப் பூ: ஆகுபெயர்.

61. நான்மறை - நான்கு வேதம். அவை: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன.

66. பிஞ்ஞகன் - சந்திரனை அணிந்தவர்; தலைக்கோலத்தையுடையவர்.

67. நச்சி - விரும்பி.

68. தொடி - வளையல்களுக்குக் காவலாக இடப்படும் ஓராபரணம்.

72. சேடியர் - குற்றேவல் மகளிர்.

74. சிந்துரம் - திலகம்.

77. பாற்றினன் - நிலைநீங்கச் செய்தான், ஓட்டினன்.

78. அடிகள் - பெரியோன்.

79. கமலத்தொடை - தாமரைமலர் மாலை.

80. மாடகம் - முறுக்காணி

92. தாழ்ந்துநின்றுரைப்ப - வணங்கிநின்று வேண்ட.

96. ஆயிழை - கைவல்லோன் விசேடமாக ஆராய்ந்து செய்யப்பட்ட ஆபரணம்

97. சேயிதழ் - சிவந்த மடல்.

100. பரிபுரம் - காற்சிலம்பு.

101. எண்ணெய்க் காப்பு - எண்ணெயபிடேகம்.

104. அறுசுவையடிசில் - அறுசுவை கலந்த உணவு, அறுசுவையாவன: கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு. அடிசில் என்பதை உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என்னும் ஆகாரப் பொது என்பர் சேனவரையர்.

105. சூடகம் - கையிலணியும் அணிவிசேடம்; வளையலுமாம். அது முன்கையில் அணியப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10[illegible]. இந்து - எண்ணுட்டிங்கள், நுதல்போன்றது அதுவேயாதலின் இங்ஙனம் கூறப்பட்டது. ''மாக்கடனடுவணெண்ணுட் பக்கத்துப் பசுவெண்டிங்க டோன்றியாங்கு கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்'' என்ருர் பிறரும்.

115. வள்ளி - கொடி.

116. அருத்தி - விருப்பம்.

118. கற்றை - மயிர்க்கூட்டம். மதி - சந்திரகலே. இறைவன் சூடியகலே இரண்டு என்பர் அடியார்க்கு நல்லார்.

120. கன்றுமான் - மான்கன்று. ''யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையு, மானேடைந்துங்கன்றெனக் குரிய'' என்ருராயினும் உரிய என்றதனுல், மான் கன்று என்றல் மரபாயிற்று.

123. தவளவெண்ணீறு - நாகிளங்கமுகு என்பது போல. முந்நூல் - உபவீதம். முந்நூற்கொண்டு முப்புரியாக்குதலின் ஒன்பதாகிய நூலேத் தன்னிடத்தேகொண்ட ஒருபுரி மூன்ருகிய நூல் என்பர் நச்சினுர்க்கினியர்.

124. வேங்கையின் பூவணமான - வேங்கைப் பூவின் வர்ணமான.

126. எழுபிறப்பு - எழுவகைப் பிறப்பு. அவை: தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. இவ்வெழுவகையுள் முன்னின்ற ஆறும் இயங்கியற்பொருள். இறுதியில் நின்ற தாவரம் நிலேயியற் பொருள்.

127. சிலம்பும் - ஒலிக்கின்ற. சதுர்மறை - நான்கு வேதம்.

130. தாமம் - பூ; மாலேயுமாம்.

131. ஏமம் - புதையல். எழுமடி - ஏழுமடங்கு.

133. காவணம் - நடைப்பந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

134. விதானித்து - அலங்கரித்து.
135. மஞ்சு - மேகம்.
140. சங்கரன் - சிவன். சுகத்தைச் செய்பவன்
141. மங்கலநாண் - திருமங்கலிய சூத்திரம்.
143 முரசு - முரசுப்பறையின் தொனி, ஆகுபெயர்.
149 புலம்புதல் - ஆரவாரித்தல்.
151. அங்குரார்ப்பணம் - முளையிடுதல். அங்குரம் - முளை. அர்ப்பணம் - இடுதல். அங்குரார்ப்பணமாவது: மங்கல காரியங்களின் ஆரம்பத்தே சந்திரனை அதிதெய்வமாகக்கொண்டு கும்பத்தினருகிற் பாலிகைகளிடத்துப் பாலிற்கலந்த நவதானியங்களை மந்திரத்தோடு பெய்து மண்ணிட்டு வளர்த்தல்.
155. அருமறை - அரிய வேத விதிப்படியும், ஆகமநூல் வழி - சைவாகமத்தில் விதித்த மந்திரகலை, தந்திர கலை, உபதேசகலை என்னும் மூன்றிணுலும்.
157, கோகனக்கொடி - இலக்குமி.
158. குரவு - நறுமணம், குராமலருமாம்.
159. அரவு - பாம்பு, நஞ்சுமாம்.
160. இறைவன் - எப்பொருள்களிலுஞ் சென்று தங்குபவன். ஆகுதி - ஓமகுண்டம்.
162. அமளி - படுக்கை.
163. உரம் - வேகம், வலியுமாம்.
166. உஞ்சை - அவந்தி. இது சத்தபுரிகளுள் ஒன்று. இங்கே இறைவன் மகாகாளேசுவரர் என்னுந் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கின்றார். இங்கேயே விக்கிரமார்க்கனும் அவன் சந்ததியினரும் இருந்தார்கள்.
170. களிறு - ஆண்யானை. பிடி - பெண்யானை. ஓங்கிய தனியெழுத் தொன்றிரண்டாய்த் தூங்குகைம்மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிற் றேன்றிற்றெனப்பவே" என்பது கந்தபுராணம்.

172. ஓர்வழி - ஒருவழி. இங்கே ஓர் என்பது ஒன்று என்னும் எண்ணுப்பெயரின் விகாரமாய் வேற்றுமையுருபேலா ததாய்ப் பெயர்ச்சொல்லுக்கு முன்னுக வருவதொரு மொழியாம்

173. பனிமொழி - குளிர்ந்த வசனம். பணிமொழி என்பது பாடமாயின் மெல்லியமொழி எனப்பொருள் கொள்க.

175. மெல்லியல் - மென்மையைத் தமக்கு இயல்பாக உடையாள். மென்மை என்பது பெண்டீர்க்கு மிகவியல்பு அதனைத் தமக்குச் செய்துகோளன்றி இயல்பாக உடையர்.

176. அல்லி - பூவினகவிதழ்.

179. மதகரி - மதமிக்கயானை. என்றது கயாசுரன் என்னும் யானையை.

181. குவலயம் - பூமி.

183. நீடியவானோர் - நீடித்த வாழ்நாளை உடைய தேவர்கள், என்றது விண்டு முதலியோரை. "சாதலும் பிறப்பு மில்லாத் தன்மையர்" என்றதும் இது நோக்கிப் போலும். நெடுநிலை - நீடித்த பதவி.

184. திங்கள் - மாதம்.

185. முண்டகமலர் - தாமரைமலர்.

186. சதங்கை - காலணியுளொன்று, அலம்புதல் - ஒலித்தல் அதிர்தலுமாம்.

187. குண்டம் - வட்டம்.

188 புண்டரம் - திரிபுண்டரம்.

189. முப்புரிநூல் - உபவீதம்.

193. தவளம் - வெண்மை. கிம்புரி - தந்தப்பூ.

198. உதரபந்தனம் - அரைப்பட்டிகை என்னும் ஆபரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டியாணமாகிய யோகபட்டமுமாம்.

212. இலேகர் - தேவர், நல்லிரேகையையுடையவர்கள் என்பது பொருள் எழுதுகிறவர்களுமாம்.

218. கடல்பருகு அயில்வேல் - சமுத்திரத்தைக் குடிக்கும் கூரியவேல் என்றது, உக்கிரபாண்டியனுகத் திருவவதாரஞ் செய்தபொழுது பாண்டியன் விடுத்த கடலை வற்றச்செய்த கதை கூறிற்று.

223. நேடியவானோர் - சமயம் பார்த்திருந்த தேவர்கள்.

224. பாவகன் - அக்கினி. சுத்தமாக்குகிறவன் என்பது பொருள்.

229. ஏமநாடு - பொன்னுடு.

231. நயனம் மூன்று - சோமசூரியாக்கினிகள். இறைவனுக்குரிய சோமசூரியாக்கினிகளாகிய மூன்று கண்களுள்ளே அக்கினியாகிய தீ நெற்றிக்கண்ணுய் இருத்தலின் அஞ்சாது செல் என்றார். என்க.

234. வானமன் - இந்திரன்.

235. ஈனம் - குற்றம்.

241. மூவிருநுதல்விழி - ஆறு திருநெற்றிக் கண்கள். இறைவனுக்குத் திருமுகமாறுதல் ''ஐந்துமுகத்தோ டதோமுகமுந் தந்து திருமுகங்களாறுகிச் செந்தழற்கணுறும் ஒருமுகமாய்த் தீப்பொறியாறுய்ப்ப'' என்பதனுனுணர்க.

241. முளரி - அக்கினி.

245. வாதராசன் - வாயுதேவன்.

247. தார் - பூ.

249. சரவணப்பொய்கை - சரவண வாவி. இது இமயமலைச் சாரலிலுள்ளது. ''நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை'' என்றார் பிறரும்.

250. சரவணக்கமலம் - சரவணத்தடாகத்திலுள்ள கமலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 . குரவு - குராமலர். குரு - நிறம்.

254. மலையுந்தானவர் - மாறுபடுகின்ற அசுரர்கள். மலையும் என்றதற்குக் கிரவுஞ்ச மலையையும் எனக் கொள்ளினுமாம்.

256. அறுமுகம் - ஆறுதிருமுகம். அவையாவன: ஜகத்பு. வசத்பு, விஸ்வபு, ருத்ரபு, ப்ரம்மஹபு, புவனபு.

257. கறை - நஞ்சு.

260. வாரம் - மலைப்பக்கம். வெற்பு - மலை, என்றது கிரவுஞ்சமலையை. இது குருகு கிரி எனவும் பெயர்பெறும்.

265. தாரகன் - தாரகப்பொருளாயுள்ளவர்.

268. அண்டர் - தேவர்கள்.

274. கடம்பன் - கடப்பம் மாலையை அணிந்தவர்.

282. சக்கரபாணி - சக்கராயுதமேந்திய கையையுடைய விஷ்ணு. சான்று - சாட்சி

283. அக்கு - என்புமாலை.

293. வாரணம் - யானை.

295. நாரணன் - விஷ்ணு.

301 கம்பமா - யானை.

304. தம்பம் - பற்றுக்கோடு.

306 அடைகாய் - வெற்றிலை பாக்கு.

308. ஆர்த்த - தொடுத்த. கலிங்கம் - சீலை.

325. கோசிகம் - பட்டுவஸ்திரம். கோடிகம் - பருத்தி வஸ்திரம்.

326. நூல்வலை - நூலாற்சுற்றிய.

336. இந்திரவை - இந்திரவில்.

337. மகரப் பகுவாய் - சுறுவினது அங்காந்த வாயாகச் செய்த தலைக்கோலம். இது நெற்றியிலணியப்படுவது. மகரப்பகுவாய் வாகுவலயம் எனக்கொண்டு சுறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினது அங்காந்த வாயாகச்செய்த வாகுவலயம் எனப் பொருள் கூறுதலும் ஒன்று.
வாகுவலயம் - தோளிலணியும் ஓர் அணிவிசேடம்.

340. புகர் - குற்றம்.

341. சாந்து - கலவைச் சாந்து.

344. செருந்தி - செருந்திப்பூ. செண்பகம் - செண்பகப்பூ. செங்கழுநீர் - செங்கழுநீர்ப்பூ.

345 குருந்து - குருந்தம்பூ. மல்லிகை - மல்லிகைப்பூ. கோங்கு - கோங்கம்பூ. குன்றுத்தி - மலையாத்திப்பூ.

346. தாதகி - திருவாத்திப்பூ. பாதிரி - பாதிரிப்பூ. மந்தாரம் - செவ்வரத்தம்பூ. கொக்கிறகு மந்தாரமுமாம்.

347. மாதுளி - குருக்கத்திப்பூ. கடம்பு - கடப்பம்பூ. மகிழ் - மகிழம்பூ. ஞாழல் - புலிநகக் கொன்றை.

348. நெய்தல் - நெய்தற்பூ. தமிலம் - எட்பூ. நீலம் - கருங்குவளைப்பூ. தாடிமம் - தாதுமாதுளம்பூ.

349. குல்லை - கஞ்சக்குல்லைப்பூ. கொன்றை - திருக்கொன்றைப்பூ. குரவு - குராவுமலர்

350. நரந்தை - நாரத்தம்பூ, சிவகரந்தையுமாம். அலரி - அலரிப்பூ. இது ஆற்றலரி, ஈழத்தலரி, குங்குமவலரி, செவ்வலரி, நீரலரி, வெள்ளலரி என ஆறு வகைப்படும். நந்தியாவர்த்தம் - நந்தியாவர்த்தம்பூ.

351. கரந்தை - நாறுகரந்தை, கல்லாரையுமாம். கமலம் - தாமரைப்பூ. இருவேலி - வெட்டிவேர். செவ்வந்தி - செவ்வந்திப்பூ. அது செண்டுச்செவ்வந்தி துலுக்கச்செவ்வந்தி, வெள்ளைச்செவ்வந்தி, மஞ்சட் செவ்வந்தி, முட்செவ்வந்தி எனப் பலவகைப்படும். பிச்சி - ஜாதிமல்லிகை. சிறுசெண்பகமலர் - சிறுசெண்பகப்பூ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

353. மவ்வல் - முல்லைப்பூ. செவ்வல்லி - செவ்வாம்பற்பூ. மயிலை - வெட்சிப்பூ. கொடிமல்லிகைப்பூ என்பர் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர். இருவாட்சி - இருவாட்சிப்பூ.

354. தும்பை - தும்பைப்பூ. அறுகு - அறுகம்புல். துளாய் - திருத்துளாய். பூளை - பூளைப்பூ

355 பட்டிகை - பட்டிகைப்பூ. மந்தம் - பொன்னூமத்தம்பூ. எருக்கு - எருக்கலம்பூ

356. காந்தள் - கார்த்திகைப்பூ கூதாளம் - கூதாளிப்பூ. காக்கணம் - வெண்காக்கொன்றைப்பூ அடம்பு - அடம்பம்பூ.

357. பஞ்சவில்வம் - ஐந்துவகை வில்வம்: நொச்சி, விளா, வில்வம், மாவிலங்கு, கிழுவை என்பன. வில்வம், ஜடாமஞ்சி, மகாபத்திரை, ஆத்தி, நாயுருவி எனக் காமிகாகமம் கூறுகின்றது.

358. களபம் - கலவைச்சாந்து.

359. ஏந்து இள முலையார் - உயர்ந்து தோன்றுகின்ற இளமையாகிய முலைகளை உடைய பெண்கள்.

360. கண்டசருக்கரை - வெல்லம்.

364. இருவி - தினையரிந்ததாள். . இருதினை -செந்தினை, கருந்தினை.

368. இயம் - வாச்சியம், கொட்டுவன, ஊதுவன, எழுப்புவன, என்னுந் தொடக்கத்தன வற்றிற்கெல்லாம் பொதுப்பெயர். பொன் - தேமல்.

409. விக்கிரமார்க்கன் - சந்திரசர்மன் என்னும் பிராமணனுக்கு உச்சயினிபுரத்து அரசனாகிய சுருதகீர்த்தியினது புத்திரியினிடத்துப் பிறந்த புத்திரன். இவன் உக்கிர தவங்கள் செய்து காளிதேவியினது அநுக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று அதனால் எக்கருமங்களையுஞ் சாதிக்கும் ஆற்றலுடையவனானன். சாகசாங்கன் என்னுஞ் சிறப்புப் பெயரும் இவனுக்கு இக்காரணம் பற்றியே வந்தது. இவன் நெடுங்காலம் உச்சயினிபுரத்திலே அரசுசெய்து கொண்டிருந்து ஈற்றிலே சாலிவாகனாற் கொல்லப் பட்டான்.

414. கழை - மூங்கில். இழை - நூற்கயிறு.

422. அடகு - இலைக்கறி.

433. உடையணி - அரைமணி.

436. கலைக்குலவரசன் - விக்கிரமார்க்கன்; சந்திர வமிசத்தையுடையோன் என்பது பொருள்.

448. இயல் - சாயல்.

453. ஆர்த்தல் - ஒலித்தல், வெளுத்தல்.

455. ஆசறையவன் - குற்றத்தை நீக்குபவன்.

456. காசறை - மயிர்ச்சாந்து. அளகம் - வெண்மயிர்.

463. புரிகுழல் - கடைகுழன்று சுருண்ட கூந்தலையுடையாள்.

465. ஔவை - இவர் தேனெனப் பாலெனச் சில்லமிழ் தூற்றென ஆத்திசூடி முதலாம் பல அறநூல்களைச் செய்தவர் தெய்வப்புலமை வாய்ந்த மானினியார்; தென்னு தமிழ் நாவலராகிய வள்ளுவர் சகோதரி; இவர் கம்பர் காலத்தவர்.

485. முத்தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ். மூதறிவு - பேரறிவு.

487. நோன்பு - விரதம்.

490. யாத்தல் - கட்டுதல்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அகத்திய முனிவர் அருளிச் செய்த

# பிள்ளையார் கதை.

இயற்றமிழ் ஆசிரியர்

திரு. அ. க. வைத்தியலிங்கபிள்ளை

அவர்களின்

அரும்பதவுரையுடன்.

ரூபா 25/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சாயி அச்சகம், இணுவில்.